# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

இலக்கம் 20, வோட் பிளேஸ்
கொழும்பு 07.

2015.02.05

**தாபனச் சுற்றறிக்கை இலக்கம் : 02/2015**

பல்கலைக்கழக உபவேந்தர்கள்

வளாக அதிபதிகள்

நிறுவகப் பணிப்பாளர்கள்

<u>முறையான ஒழுக்காற்று விசாரணைகளுக்கான செலுத்துகைகள்</u>

2006.03.06 ஆம் திகதிய 06/2006 ஆம் இலக்க தாபனச் சுற்றிக்கை மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

2014.09.30 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் உயர் கல்வி நிறுவகங்களினால் நடாத்தப்படும் முறையான ஒழுக்காற்று விசாரணைகளுக்காக செலுத்தும்போது கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருக்கும் கட்டண அளவுகளின் பிரகாரம் செலுத்துமாறு 2014.09.30 ஆம் திகதிய DMS/0008/OUSL ஆம் இலக்க கடிதத்தின் ஊடாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் பணிப்புரை விடுத்துள்ளது.

| விபரம் | விசாரணை நடைபெறும் ஒரு மணித்தியாலத்திற்கான கொடுப்பனவு | எழுதுவினைஞர் / தட்டெழுத்தாளரின் உதவி மற்றும் தபால் கட்டணமாக செலவான தொகையை மீளளிப்புச் செய்தல் | இறுதி அறிக்கை மற்றும் சாட்சிகளின் அறிக்கையைத் தயாரித்தல் |
|---|---|---|---|
| 01. விசாரணை அதிகாரி<br><br>அ). மத்திய முகாமைத்துவ மட்டம் அல்லது அதனைவிட மேல் மட்ட உத்தியோகத்தருக்கு எதிராக நடாத்தப்படும் முறையான ஒழுக்காற்று விசாரணை | ரூபா 375/- | ரூபா 1875/- | ரூபா 3750/- |

| | | | |
|---|---|---|---|
| ஆ). மத்திய முகாமைத்துவ மட்டத்தை விட கீழ் மட்ட உத்தியோகத்தருக்கு எதிராக நடாத்தப்படும் முறையான ஒழுக்காற்று விசாரணை | ரூபா 300/- | ரூபா 1500/- | ரூபா 3750/- |
| 02. முறைப்பாட்டை வழிநடாத்தும் உத்தியோகத்தர் | ரூபா 200/- | - | ரூபா 1250/- |
| 03. விசாரணை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் தடடெழுத்தாளருக்கு / சுருக்கெழுத்தாளருக்கு விசாரணை நடைபெறும் ஒரு மணித்தியாலத்திற்கு | ரூபா 125/- | - | - |

மேற்குறிப்பிடப்பட்ட கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக ஓய்வுபெற்ற விசாரணை அதிகாரியொருவருக்கு அவர் ஓய்வு பெறும்போது அரசாங்க சேவையில் வகித்த பதவியை அடிப்படையாகக் கொண்டும் அரசாங்க சேவையில் பணிபுரியும் விசாரணை அதிகாரியொருவருக்கு அவர் வகிக்கும் பதவியை அடிப்படையாகக் கொண்டும் தாபனக் கோவையின் ஏற்பாடுகளுக்கமைய போக்குவரத்துச் செலவு மற்றும் இணைந்த படிகளைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமை உண்டு. மேலும், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகளில் பணியாற்றிய அதிகாரியொருவருக்கு அவர் ஓய்வு பெறும்போது வகித்த பதவியை அடிப்படையாகக்கொண்டு 34 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய போக்குவரத்துச் செலவு மற்றும் இணைந்த படிகளைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமை உண்டு.

மேற்குறிப்பிடப்பட்ட மாற்றங்களைத் தவிர 06/2006 ஆம் இலக்க தாபனச் சுற்றிக்கை ஏற்பாடுகளில் வேறெந்த மாற்றங்களும் ஏற்படுத்தப்படவில்லை.

இதன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பணிவாய் வேண்டிக்கொள்கின்றேன்.

ஒப்பம்: பேராசிரியர் ஷனிக்கா ஹிரிம்புரேகம

தலைவர்

**பிரதிகள்:-**

1. செயலாளர், உயர் கல்வி அமைச்சு
2. தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
3. உப தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
4. உறுப்பினர்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
5. செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
6. பீடாதிபதிகள்
7. பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்
8. கணக்காளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
9. பல்கலைக்கழகங்களின் நிதிப் பொறுப்பாளர்கள் (Bursars)
10. நூலகர்கள், சிரேஷ்ட உதவி நூலகர்கள், உதவி நூலகர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள்.
11. பிரதிப் பதிவாளர்கள் / சிரேஷ்ட உதவிப் பதிவாளர்கள் / உதவிப் பதிவாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் / வளாகங்கள்
12. பிரதி நிதிப் பொறுப்பாளரகள் / சிரேஷ்ட உதவி நிதிப் பொறுப்பாளர்கள் / உதவி நிதிப் பொறுப்பாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் / வளாகங்கள்

13. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
14. பல்கலைக்கழகங்களின் அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர்கள்
15. உயர் கல்வி நிறுவகங்களின் சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள் / உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள்.
16. தொழிற்சங்களின் செயலாளர்கள்.
17. கணக்காய்வாளர் நாயகம்.

கோப்பு இலக்கம் : UGC/HR/6/2/47